**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், போளூர், திருவண்ணாமலை மாவட்டம்**

2026 ஆம் ஆண்டு பிப்ரவரி திங்கள் 07 ஆம் நாள் சனிக்கிழமை 1873 ம் ஆண்டு 11 வது ஏற்பாட்டின்படி திருமதி. க.இந்துமதி, கிரேடு III பென்ச் கிளார்க் என்பவரால் ஆணையிட்டு உறுதி செய்யப்படுகிறது.

**OS.No.155/2021** வா.சா. 1 என்பவரின் வாக்குமூலம்

| | | | | | |
|---|---|---|---|---|---|
| **பெயர்** | : | சிவா | **வயது** | : | 31 |
| **த.பெ** | : | பெருமாள் | **தாலுக்கா** | : | போளூர் |
| **கிராமம்** | : | திரிசூர் | **தொழில்** | : | விவசாயம் |

**07.02.2026 – வா.சா.1 குறுக்கு விசாரணை**

1)நான் எதற்காக வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் 2021 ல் நான் தாவாசொத்தை ஜெயமணி என்பவரிடம் 35 சென்டை கிரையம் பெற்றேன், வாங்கி அளந்தபிறகு 25 சென்ட் தான் இருந்தது, நான் வாங்கிய இடத்தில் பிரதிவாதிக்கு இடம் வருவதாக அவர் என்னிடம் பிரச்சனை செய்கிறார், ஆகையால் வழக்கு தாக்கல் செய்துள்ளேன். வழக்கில் என்ன பரிகாரம் கேட்டள்ளேன் என்றால் அந்த இடம் எங்களது தான் என்பதற்காக வழக்கு தாக்கல் செய்துள்ளேன். 1ம் வாதி யார் என்றால் என்னுடைய மாமா, நானும் 1ம் வாதியும் சேர்ந்து தான் வழக்கு சொத்தை கிரையம் பெற்றோம். வழக்கு சொத்தை நான் ஜெயமணி என்பவரிடம் கிரையம் பெற்றேன் என்றால்ச ரிதான். எந்த தேதியில் கிரையம் பெற்றேன் என்றால் 2021 வருடத்தில் 9 ம் மாதம், 10 ம் மாதம் தோராயமாக வாங்கினோம், தேதி சரியாக ஞாபகம் இல்லை.

2)கிரையதொகை எவ்வளவு என்றால் 1 செண்ட் ரூ.15,500 என்று மொத்தமாக 35 செண்ட் வாங்கியுள்ளேன், மொத்தம் ரிஜிஸ்ரேசன் செலவுடன் 4 லட்சம் ரூபாய்க்கு மேல் இருந்தது. ஜெயமணி அவர்களிடமிருந்து கிரையம் பெற்றதற்கு நான் கிரையபத்திரத்தை தாக்கல் செய்துள்ளேனா என்றால் தாக்கல் செய்துள்ளேன். வழக்கு சொத்து எங்குள்ளது என்றால் பேட்டை கிராமத்தில் உள்ளது. வழக்கு சொத்து நஞ்சையா, புஞ்சையா, கிராம நத்தமா என்றால் விவசாய நிலம், நஞ்சை தான். நாங்கள் ஜெயமணி அவர்களிடமிருந்து 35 செண்டை கிரையம் பெற்றுள்ளோம். வழக்கு சொத்தின் விஸ்தீரணம் எவ்வளவு என்றால் 25 செண்ட ஆகும். வழக்கு சொத்தின் சக்குபந்தி என்ன என்றால் மேற்கே முனியப்பன் நிலம், கிழக்கு பெருமாள் நிலம், வடக்கும் பெருமாள் நிலம், தெற்கு பக்கம் பேட்டையிலிருந்து எடப்பிறை போகும் ரோடு உள்ளது.

3)நாங்கள் ஜெயமணியிடமிருந்து கிரையம் பெறுவதற்கு முன்பு அளவீடு செய்யாமல் வாங்கிவிட்டோம் என்றால் மேற்படி சொத்தை வாங்கியபிறகு தான் அளவீடு செய்தோம். வழக்கு சொத்து ஜெயமணிக்கு எப்படி பாத்தியப்பட்டது என்றால் ஜெயமணி அவர்கள் 1996 ல் கோவிந்தம்மாள் அவர்களிடமிருந்து கிரையம் பெற்றார். கிரையதேதி தெரியுமா என்றால் தேதி தெரியாது, மாதம் தெரியாது, வருடம் மட்டும் 1996 ஆகும். ஜெயமணி அவர்கள் கோவிந்தம்மாள்

அவர்களிடமிருந்து கிரையம் பெற்ற பத்திரத்தை தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. நாங்கள் ஜெயமணி அவர்களிடமிருந்து கிரையம்பெற்றதற்கான அசல் கிரையம் தாக்கல் செய்துள்ளேனா என்றால் தாக்கல் செய்துள்ளேன். மேற்படி அசல் கிரையபத்திரத்தை தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல.

4)ஜெயமணியின் கணவரின் தம்பி தான் பிரதிவாதி என்றால் சரிதான். ஜெயமணியின் கணவர் பெயர் குணசேகர் என்றால் சரிதான். பிரதிவாதி காசி, குணசேகர், மற்றும் சுரேஷ் ஆகியோர் சகோதர்கள் என்றால் சரிதான். குணசேகர், சுரேஷ், காசி மூவரும் சேர்ந்து 25.01.1994 தேதியில் ஒரு குப்பு சாமி செட்டியல் அவர்களிடமிருந்து வழக்கு சொத்தை கிரையம் பெற்றுள்ளார்கள் என்றால் எனக்கு தெரியாது. சுரேஷ் மற்றும் குணசேகர் காலமாகிவிட்டார்கள் என்றால் சரிதான். மேற்படி குணசேகர், சுரேஷ், காசி மூவரும் வழக்குசொத்தை கூட்டாக அனுபவித்து வந்தார்கள் என்றால்இல்லை, நாங்கள் தான் அனுபவித்து வருகிறோம். பிரதிவாதி 25.01.1994 தேதியிலேயே வழக்கு சொத்தை கிரையம் பெற்றுவிட்டாரகள் ஆகையால் நாங்கள் 2021ல் கிரையம் பெற்றது செல்லாது என்றால் சரியல்ல.

5)மேலும் 1996ல் ஜெயமணி அவர்கள் கோவிந்தம்மாள் அவர்களிடமிருந்து வாங்கிய பத்திரமும் செல்லாது என்றால் சரியல்ல, கோவிந்தம்மாள் அனுபவித்து வந்தார்கள், அதன்பிறகு ஜெயமணி வாங்கினார்கள், அதன்பிறகு 15 வருடங்கள் ஜெயமணி அனுபவத்தில் இருந்து அதன்பிறகு நாங்கள் வாங்கினோம். வழக்கு சொத்து என்னுடையது தான் உரிமை கோரி வழக்கு தாக்கல் செய்துள்ளேனா என்றால் ஆமாம். வழக்கு சொத்து உரிமை கோரி பரிகாரம் எதுவும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. வழக்கு தாவா தடையுத்தரவு கோரி மட்டும் தாக்கல் செய்யப்பட்டள்ளது என்றால் சரியல்ல. வழக்கு சொத்து பிரதிவாதிகளுக்கு மட்டும் தான் பாத்தியப்பட்டது என்றால் சரியல்ல.

6)வழக்கு சொத்தில் பிரதிவாதி வந்து பிரச்சனை எதுவும் செய்தாரா என்றால் பிரச்சனை எதுவும் செய்யவில்லை. வழக்கு சொத்து சம்மந்தமாக பஞ்சாயத்து எதாவது வைத்தோமா என்றால் பஞ்சாயத்து நடைபெற்றது. வழக்கு சொத்து காசி, குணசேகர் மற்றும் சுரேஷ் ஆகியோர் 25.01.1994 ல் குப்புசாமி செட்டியாரிடமிருந்து கிரையம் பெற்று அனுபவித்து வருகிறார்கள், எனக்கும் வழக்கு சொத்திற்கும் உரிமை இல்லை என்றும் ஆகையால் இந்த வழக்கு தள்ளுபடி செய்யவேண்டும் என்றால் சரியல்ல.

குறுக்கு விசாரணை முடிவடைந்தது.

Taken down by me in open court read over to the witness and acknowledged by him/her to be correct.

SALMA BASEER

Digitally signed by SALMA BASEER
Date: 2026.02.09 15:07:32 +0530

District Munsif,
Polur.